சுட்டிக்காட்டி, இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்திருக்கின்றார். ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும். அளவுகோல்கள் பூர்த்தியாகின்றபட்சத்தில், அது உடனடியாக அறிவிப்பாக வெளியிடப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

79—

பேருந்து வசதி

***9381—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூரிலிருந்து கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை மற்றும் வேலூர் வழியாக திருப்பதிக்கு தினந்தோறும் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் கோரிய வழித்தடம் புதிய அண்டை மாநில வழித்தடம் ஆகும். தற்போது விழுப்புரம் கோட்டத்தில் ஒன்பது பேருந்துகள் மூலமாக 18 நடைகள் தினசரி கள்ளக்குறிச்சியிலிருந்து திருவண்ணாமலை மற்றும் வேலூர் வழியாக திருப்பதிக்கு இயக்கப்படுகின்றன. ஆத்தூர்–கள்ளக்குறிச்சி இடையே உள்ள தொலைவு 47 கி.மீ. ஆகும். ஆத்தூர்–கள்ளக்குறிச்சிக்கு ஒவ்வொரு ஐந்து நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளது. எனவே, இப்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.*

திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்துவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும், துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. அ. மருதமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூரிலிருந்து சென்னைக்கு ஒரு* ultra deluxe *பேருந்து ஒவ்வொரு ஞாயிறுதோறும் வந்துகொண்டிருந்தது. அந்த நிலையை மாற்றி, மேற்படி பேருந்து தினந்தோறும் ஆத்தூரிலிருந்து தலைநகர் சென்னைக்குச் சென்று வர ஆவன செய்த தமிழகத்தின் தலைமகனார் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதி மக்கள் CT scan *எடுக்க வேண்டுமென்றால், சேலம் அரசு தலைமை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. தற்போது, ஆத்தூர் அரசு மருத்துவமனையில்* CT scan *உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்த ஏழையெளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களுக்கும், விவேகமான பதிலை விரைவாகச் சொல்லும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்*

துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் வருவாய் வட்டத்திலிருந்து பிரிந்த வருவாய் வட்டங்கள்தான் கெங்கவல்லி மற்றும் பெத்தநாயக்கன்பாளையம் ஆகியவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்வி கேட்பதற்குத்தான் உங்களுக்கு நான் வாய்ப்புக் கொடுத்தேனேயொழிய, மற்ற துறைகளைப் பற்றிப் பேசுவதற்கு அல்ல. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் இதில் துணைக் கேள்வி கேட்பதாக இருந்தால் கேளுங்கள். இல்லையென்றால், உட்காருங்கள். போக்குவரத்துத் துறை குறித்து என்ன கேள்வி கேட்க வேண்டுமோ, அதைக் கேளுங்கள்.

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் வருவாய் வட்டத்திலிருந்து பிரிந்த வருவாய் வட்டங்கள்தான் கெங்கவல்லி மற்றும் பெத்தநாயக்கன்பாளையம் ஆகியவை. ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிகளில் சுமார் 10 இலட்சம் மக்கள் வசித்து வருகின்றார்கள். சின்னகல்வராயன்மலை, பச்சைமலை உள்ளிட்ட மலைப் பகுதிகள் நிறைந்த பகுதியாகும். மேற்படி பகுதியிலுள்ள மக்கள் திருப்பதி தேவஸ்தான திருக்கோயிலுக்குச் செல்ல வேண்டுமென்றால், கள்ளக்குறிச்சிக்குச் சென்றுதான் செல்ல வேண்டும். ஏனெனில், கள்ளக்குறிச்சியிலிருந்தான் திருப்பதிக்கு நேரடிப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. திருப்பதிக்குச் செல்ல வேண்டுமானால், மேற்படி பேருந்துகளில் முன்பதிவு செய்யப்பட வேண்டும். எங்கள் பகுதி மக்கள், பேருந்துகளில் முன்பதிவு செய்ய கள்ளக்குறிச்சிக்குச் சென்றால், முன்பதிவு முடிந்துவிட்டது என்று கூறுகிறார்கள். எனவே, எங்கள் பகுதி மக்கள் ஏமாற்றமடைந்து திரும்புகிறார்கள். எனவே, திருப்பதி தேவஸ்தான திருக்கோயிலுக்கு ஆத்தூரிலிருந்து கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை மற்றும் வேலூர் வழியாக தினந்தோறும் சென்று வர பேருந்து இயக்க மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 10]

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடத்தை ஆய்வு செய்து, கள்ளக்குறிச்சியிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய பேருந்தின் வழித்தடத்தை நீட்டிப்பு செய்து, ஆத்தூரிலிருந்து இயக்குவதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

கர்நாடக இசை மற்றும் பரதநாட்டியத்திற்கான பயிற்சி

***42766—டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக கிராமங்களில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு கர்நாடக இசை மற்றும் பரதநாட்டியம் போன்ற கலைகளில் பயிற்சி வழங்கி ஊக்குவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கலைகளின் காதலன், நடமாடும் பல்கலைக்கழகம் என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பட்ட நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுடைய நூற்றாண்டு பிறந்த நாள் இன்று. அன்னாருக்கு இந்தச் சபையில் அஞ்சலியைச் செலுத்துவதில் பெருமையடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தன் வாழ்நாளையே கலைகளுக்கு அர்ப்பணித்த கலை அரசியாய்த் திகழ்ந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த சீரிய திட்டங்களின் வாயிலாக இசை மற்றும் நடனத்தை ஊராட்சிகளுக்குக் கொண்டு செல்ல தமிழக அரசு பாடுபடும் என்பதை இவ்வினாவிற்கு விடையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.